முருகப்பெருமான் துணை

**உலக ஞானத் தலைவன் முருகப்பெருமான் அருளிய அருள்வாக்கு**

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1617

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**03.03.2024,** ஞாயிற்றுக்கிழமை

1. ஓங்கார ஞான சொரூபமே
ஓங்காரக்குடில் படைத்த ஆறுமுக அரங்னே
ஓங்காரன் என் அவதார ஞானியே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
ஓதிடுவேன் ஞான அறிவுரை ஆசி
2. ஆசியதும் சோபகிருது சால் திங்கள் தன்னில்
(சோபகிருது வருடம் மாசி மாதம் 20 ம் நாள், 03.03.2024, ஞாயிற்றுக்கிழமை)
அரங்கனுக்கு இன்னும் ஆற்றல் பெருக எடுத்துரைப்பேன்
வாசி வென்ற மகா சக்தியர்கள் எல்லாம்
வணங்கி அரங்கனோடு கலந்து நிற்க
3. ஆசி தந்து அரங்கன் கரம்பட
அகிலத்தார்க்கு தீட்சை தந்தால் போதும்
அவரவர்கள் விரும்புகின்ற ஞானியர்களின் பலமாக
அரங்கன் வழி மகான்கள் ஆசி கிட்டி
4. அகிலத்தார் அனைவருமே ஞானிகளாகும் வாய்ப்பும்
இந்த அகிலத்தையே மாற்றவல்ல மகா சக்தியும் கிட்ட நேரும்
நேர்மைகொண்டு அரங்கன் சீடர்களென
நிலவுலகில் அடையாளம் கண்டுவிட்டால்
5. வறுமை விலகும் வருகின்ற எதிர்பு வஞ்சம் சூழ்ச்சி
வையகத்தில் அனைத்தும் அகலும்
அகன்றுமே சர்வ பாதுகாப்பாய்
அரங்கனே யாவுமென முழுமையான சரணாகதி
6. வரங்களாக அரங்கனிடம் கொண்டு பெற்றுவிட்டால்
வையகத்தார் வாழுகின்ற காலமே ஆறுமுகன் என் ஆசிஅருள் பெறுவதோடு
வாழும் ஞானிகளாக ஆற்றல் பெருகி
வையகத்தைக் காக்கின்ற மகா சக்திகளாவர்

7. ஆகவே அரங்கனால் இந்த அற்புதம் நிகழும்
ஆகவே அரங்கன் தர்மத்தால் இந்த மாற்றம் நிகழும்
மிகைபட பேரற்புதத்தை மேலான அரங்கன்
தொண்டர்படை கொண்டு யான் நிகழ்த்த இருக்க

8. இருக்கவே உலகோர் இணங்கி வந்தால் போதும்
கருத்தாக இந்த பேருலகம்
கலி இடர்களையெல்லாம் வென்று ஞான யுகமாகும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—